
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

E WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 10 பிப்ரவரி 2010 கனி 3

## இயேசுகிறிஸ்துவின் மூலமாக கிடைக்கும் 10 காரியங்கள்

**10 THINGS THROUGH JESUS CHRIST**

சமாதானம் - ரோ.5:1
வாழ்வு - ரோ.6:1
நித்திய ஜீவன் - ரோ.6:23
இரட்சிப்பு - ரோ.7:25
மேன்மை - ரோ.15:17
ஜெயம் - 1கொரி.15:57
சுதந்தரம் - கலா.4:7
பாதுகாப்பு - பிலி.4:7
மகிமைப்படுத்தும் பாக்கியம் - 1பேது.4:11
பரிசுத்த ஆசாரியகூட்டம் - 1பேது.2:5




## கிறிஸ்துவின் வசனம்



ஒளிரும்


தொலைக்காட்சி நிகழ்ச்சி



தமிழன் TV யில் திங்கள் காலை 6.00-6.15
இமயம் TV யில் புதன் காலை 6.30-6.45

ரேடியோ நிகழ்ச்சி

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை



கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**Website: www.thewordofchristindia.com**




"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## *THE WORD OF CHRIST*

**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**

**மரம் - 10** **பிப்ரவரி - 2010** **கனி - 3**


ஆசிரியருரை

## ஓய்வுநாள்
## The Sabbath Day



ஓய்வு நாள் யூதருக்கு கொடுக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். இந்த ஓய்வுநாளை எப்படிக் கைக்கொள்ளவேண்டும் என்ற போதனையை ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் பேசிய வசனங்களை இவ்விதழில் தியானிப்போம். "என் பரிசுத்தநாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப் பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படிபண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று" என்று ஏசா.58:13,14 வசனங்களில் படிக்கிறோம். இப்போதனையை யூதர்கள் கைக்கொண்டு அதன்படி நடந்தார்களா? இல்லை. சிலர் அப்போதனையின்படி நடக்காமல் தங்களுடைய சொந்தக்காரியங்களுக்கு முதலிடம் கொடுத்தார்கள். இன்றைக்கும் சில கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஞாயிற்று கிழமையையும் முக்கியமான நாளாக கருதாமல் அந்த நாளிலே தங்களுடைய சொந்தக்காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகிறார்கள். ஞாயிற்று கிழமை அப்படி என்ன விசேஷம் என்று நீங்கள் கேட்கலாம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனை மீட்கும்படியாக, தன்னை சிலுவையில் ஒப்புக்கொடுத்து அதன்பின் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த அந்தநாள் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுகிழமை. அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். ஆகையால் அந்த நாளிலே பிதாவாகிய தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்.

ஓய்வுநாளைக் கைக்கொள்ளும்படியான போதனையில் முதலில் அவர்களுக்கு சொல்லப்பட்டது என்னவென்றால்; **'உன் காலை விலக்கி'** என்று சொல்லப்பட்டது. அவர்கள் அந்த அளவுக்கு ஓய்வுநாளை மீறி வேலைக்கு முக்கியத்துவம்கொடுத்து வேலைசெய்திருக்கிறார்கள் என்று நாம் காண்கிறோம். இதைக்குறித்து நெகேமியா சொல்வதைக் கவனியுங்கள்: "அந்த நாட்களில் நான் யூதாவிலே ஓய்வுநாளில் சிலர் ஆலைகளை மிதிக்கிறதையும், சிலர் தானியப் பொதிகளைக் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறதையும், திராட்சரசம், திராட்சப்பழம், அத்திப்பழம் முதலானவைகளின் பற்பல சுமைகளை ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுவருகிறதையும் கண்டு, அவர்கள் தின்பண்டம் விற்கிற நாளைப்பற்றி அவர்களைத் திடசாட்சியாய்க் கடிந்துகொண்டேன். மீனையும் சகலவித சரக்குகளையும் கொண்டுவந்து, ஓய்வுநாளிலே யூதா புத்திரருக்கும் எருசலேமில் இருக்கிறவர்களுக்கும் விற்கிற சில தீரியரும் உள்ளே குடியிருந்தார்கள். ஆகையால் நான் யூதாவின் பெரியவர்களைக் கடிந்துகொண்டு; நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிற இந்தப் பொல்லாத செய்கையென்ன? உங்கள் பிதாக்கள் இப்படிச் செய்ததினாலல்லவா, நமது தேவன் நம் மேலும் இந்த நகரத்தின்மேலும் இந்தத் தீங்கையெல்லாம் வரப்பண்ணினார்: நீங்களோவென்றால் ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறதினால், இஸ்ரவேலின்மேலிருக்கிற உக்கிரத்தை அதிகரிக்கப்பண்ணுகிறீர்கள் என்று அவர்களுக்குச் சொன்னேன்" என்கிறான் (நெகேமி.13:15-18). அன்றைக்கு இருந்த தேவனை அறியாத புறஜாதிமக்கள், சிலயூதர்கள் கர்த்தருடைய கட்டளையை மீறிநடக்கக் காரணமாயிருந்தார்கள் ( Man of Tyre ). இவர்கள் ஓய்வுநாளில் பலவிதமான சரக்குகளை கொண்டுவந்து யூதபுத்திரர்களுக்கு விற்பனை செய்தார்கள். அந்த நாட்களில் பெலவீனமாக இருந்த யூதபுத்திரர்கள் ஓய்வுநாளிலே கொள்வனையும் கொடுப்பனையும் செய்ய ஆரம்பித்தார்கள். இன்றைக்கும் சில இடங்களில் ஞாயிற்று கிழமை சந்தை நடக்கிறது. அன்றைய நாளில் சில பொருட்கள் மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். ஆனபடியால் சபை ஆராதனைக்கு முக்கியத்துவம்கொடுக்காமல் அந்த பொருட்களை வாங்கும்படியாக கடந்து செல்வதில் சில பெயர் கிறிஸ்தவர்கள் கவனமாயிருக்கிறார்கள். அதைப்போல யூதர்களிலும் சிலர் இருந்திருக்கிறார்கள் என்று அறிகிறோம்.

மேலும், **'ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதே'** என்று சொல்லப்பட்டு இருந்தது. ஆனால் யூதர்கள் தங்களுக்கு இஷ்டமானதை அந்த நாளிலே செய்தார்கள். எதை செய்யாதே என்று கர்த்தர் சொல்லுகிறாரோ அதைத்தான் செய்வார்கள். இது ஒன்றும் புதிது அல்ல. முற்பிதாக்கள் காலந்தொடங்கி அது இன்றுவரை தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. ஆனால், புதுஉடன்படிக்கை நிறைவேறும்முன்பாக இயேசுவோடு இருந்த கலிலேய ஸ்திரீகளில் சிலர் "கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்" என்று லூக்.23:56-ல்

வாசிக்கிறோம். இவர்கள் இயேசுவின் கல்லறையைப் பார்க்க வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள் எனக் காண்கிறோம். வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமையில் அவர்கள் கற்பனையின்படியே ஓய்ந்திருந்திருக்கிறார்கள். என்ன ஆச்சரியம்!

மேலும், **'உன் சொந்தப்பேச்சை பேசாமலும்'** என்று படிக்கிறோம். யூதர்களில் சிலர் சொந்தப்பேச்சை அன்றைய் நாளிலே துவக்கினார்கள். இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையில் நிச்சயதார்த்தம் செய்கிறார்கள். சிலர் திருமணம் வைக்கிறார்கள். ஞாயிற்றுகிழமைதான் விடுமுறைநாள் இந்த நாளிலும் ஓய்வு இல்லையா என்று பிள்ளைகள் கேட்கிறார்கள். ஆகையால் நாமெல்லாரும் பிக்னிக் சென்றுவருவோம் என்று சொல்லி பல இடங்களுக்குச் சுற்றிப் பார்க்கும்படியாக கடந்து செல்லக்கூடிய நாளாகவும் ஞாயிற்றுகிழமையை மாற்றிவிட்டார்கள். உலகமுழுவதும் ஞாயிற்று கிழமை விடுமுறை நாளாக இருக்கிறது. அதற்காக நம்தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டும்.

மேலும், **'ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்று கருதவேண்டும்'**. அநேகருக்கு மனமகிழ்ச்சி என்றாலே திருமணநாளைத்தான் மனமகிழ்ச்சியின் நாளாக கருதுவார்கள். கர்த்தரோடு இணைந்து இருக்கும் மனுஷன் கர்த்தருடைய நாளை மனமகிழ்ச்சியின் நாளாக கொள்ளவேண்டும். தேவாலயத்தின் அலங்கார வாசல் என்னப்பட்ட வாசலண்டையிலே சப்பாணியாய் உட்கார்ந்துகொண்டு பிச்சைகேட்டுக்கொண்டிருந்த சப்பாணி, பேதுரு மற்றும் யோவானால் தூக்கிவிடப்பட்டபோது குதித்தெழுந்து தேவனைத் துதித்துக்கொண்டு அவர்களுடனேகூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். அவன் அந்த நாளை மனமகிழ்ச்சியின் நாளென்று கருதினான். "நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து, அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்" (சங்.97:12). நீங்கள் கர்த்தருடைய நாளாகிய ஞாயிற்று கிழமையை மனமகிழ்ச்சியின் நாளென்றும், அவரையும், அவருடைய மரணத்தையும் நினைவு கூரும்படியாக கூடி வரும் நாளென்றும் எண்ணுகிறீர்களா? கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்று கருதவேண்டும். இஸ்ரவேலர்கள் பல வருடங்களாக ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரித்தார்கள். கட்டளையின்படி ஓய்ந்திருந்தார்கள் அதை மகிமையுள்ள நாளாக கருதினார்கள். நாளடைவில் புறஜாதி மார்க்கங்களைக் கற்றுக்கொண்டு அந்நாளை பரிசுத்த குலைச்சலாக்கிப்போட்டார்கள். இன்றைக்கும் அநேகர் அதை மகிமையுள்ள நாளாக கருதாமற்போவதற்கான காரணம், தேவனை அறியாத மக்களோடு கொண்டுள்ள உறவுதான். இந்த உறவினிமித்தமே அதை அசட்டைசெய்கிறார்கள். ஒரு நாளைக்கு ஆராதனைக்கு போகாவிட்டால் என்ன ஆகிவிடப்போகிறது. அடுத்தவாரம் போய்க்கொள்ளலாம். நாம் முக்கியமான வேலைக்குப்போய் வருவோம் என்று அவர்களை இழுத்துக்கொண்டு

சென்றுவிடுவார்கள். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை எழுதின யோவான் "கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்" என்று எழுதுகிறார் (வெளி.1:10). பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்ட சூழ்நிலையில் இருக்கும்போது கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானார். அதை அவர் பரிசுத்தநாளாக கருதினார். புதுஉடன்படிக்கையின் கீழ்வாழ்கின்ற நாம் கர்த்தருடைய நாளான ஞாயிற்றுகிழமையை பரிசுத்த நாளாக எண்ணுவோமானால். தேவன் நாம்மோடு கூட இருப்பார். ஆண்டவராகிய இயேசு தாம் உயிர்த்தெழுந்த ஞாயிற்றுகிழமையில் தம்முடைய சீஷர்கள் கூடியிருந்த இடத்திற்கு வந்து உங்களுக்கு சமாதானம் என்றார். எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அந்த நாளை அவர் மகிமையாய் எண்ணினபடியால் அவர்களோடு காணப்பட்டார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுகிழமை கூடி ஆராதித்து வந்தார்கள் என்று அப்.20:7 வசனங்கள் மூலம் அறிகிறோம்.

ஓய்வுநாளை கைக்கொள்ளும்போது நீ மனமகிழ்ச்சியாயிருப்பாய் என்று சொல்லப்பட்டிருந்தது. அவர்களோ அதை மீறி தங்களுடைய சொந்த காரியங்களுக்கு முதலிடம் கொடுத்தபடியால் தேவனுடைய ஆசீர்வாதத்தை சிலர் இழந்தார்கள். புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களோ கர்த்தருடைய வார்த்தையின்படி ஞாயிற்று கிழமை தேவனை ஆராதித்து "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணினார்கள்" என்று அப்.2:46-ல் வாசிக்கிறோம். இந்த மனமகிழ்ச்சியை முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பெற்று அநுபவித்தார்கள். இச்செய்தியை வாசிக்கிற அன்பு வாசகரே, நீ கர்த்தருடைய கட்டளையைக் கைக்கொண்டு அதை மகிமையாக எண்ணுவாயானால் அவர் உன்னை பூமியின் உயர்ந்த இடங்களில் ஏறியிருக்கும்படி செய்வார். "தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்" என்கிறார் (சங்.101:6). மேலும் உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப்போஷிப்பேன் என்கிறார். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நம்மையுங் குறைவுபடாது. இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? "அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்" என்ற சங்.147:14-ன் படி உங்களை யாக்கோபின் சுதந்தரத்தால், உசிதமான கோதுமையினால் போஷிப்பார். இது கர்த்தரால் சொல்லப்பட்டது.

**நாம் ஓய்வுநாளைக் கைக்கொள்ளவேண்டுமா?**

ஓய்வு நாள் யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளை. அதிலே அவர்கள் ஓய்ந்திருந்தார்கள். புதுஉடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நாம் புதுஉடன் படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவின் உபதேசத்திற்கு செவிகொடுக்க

வேண்டும். இயேசு பழைய உடன்படிக்கையின் கட்டளைகளை நிறைவேற்றும் படியாக வந்தார். அதை அவர் சிலுவையில் நிறைவேற்றினார். இப்பொழுதும் புதிதும் ஜீவனுமான உடன்படிக்கைக்கு தீருப்பப்பட்டுள்ளோம். இந்த உடன்படிக்கையைக் குறித்து பவுல் எழுதும்போது: "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்: அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது: எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது." என்கிறார் (2கொ.3:6). இந்த உடன்படிக்கையின் படி தேவனை ஆராதியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

[illegible]

## வேதஅறிவுப்போட்டி எண் 113-ல் வெற்றி பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| Sis.ஜாய வாசுகி | -சென்னை | Tmt.மாதரசி திரவியம் | -கோவை |
| K.மோகனா | -கொல்லுமாங்குடி | S.பாக்கியராஜ் | -திண்டுக்கல் |
| N.கமலவேணி | -சென்னை | M.ஆனந்குமார் | -பெரம்பூர் |
| V.F.ஷாலினி | -பாளையங்கோட்டை | M.மணிமேகலை | -மங்களம்கொம்பு |
| R.பவுல்சாமுவேல் | -பெரம்பூர் | J.நிர்மலாஜான் | -மதுரை |
| Mrs.மெல்கிடா | -திண்டுக்கல் | Mr.ஆனந்த் | -நாகை புதுக்கோட்டை, |
| P.கிறிஸ்டோபர் | -மறவமங்கலம் | | |

வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்

## மணமகன் தேவை

1. 30வயது B.Sc.,(Chem)HDCA(Comp) கணிணி ஆசிரியை. பெரம்பூர். தொடர்பு: சகோ.ஜெபகுமார். ஊழியர் - 9385500883
2. 23 வயது BBAதொடர்பு சகோ.சில்ஸ்பீ புதுக்கோட்டை 9894716585

"இந்தக்காரியம் கர்த்தரால் வந்தது" ஆதி.24:50

## மணமகள் தேவை

1. 38வயதுள்ள HSC படித்த மஹாராஷ்ட்ரிய கிறிஸ்துவ மணமகனுக்கு தொடர்பு: மும்பை ஊழியர் 09869191425
2. 27 வயது BA.. மெயின்டனன்ஸ் சூப்பர்வைசர் மற்றும் சொந்ததொழில் தொடர்பு: சகோ.சுந்தர்ராஜ். ஊழியர் சென்னை 9884831688

மேலும் தொடர்புக்கு:
S.David Martin - 98404 25080


## வேதஅறிவுப்போட்டி எண் 113-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ஆகாய் | -ஆகா.1:4 | 6. யோவான்ஸ்நானன் | -மத்.3:14 |
| 2. யோவான் | -3யோ.7 | 7. மீகா | -மீகா7:5 |
| 3. ஐயோ | -ஆபகூ.2:12 | 8. கெத்செமனே | -மாற்.14:32 |
| 4. அருள்செய்வேன் | -வெளி.3:21 | 9. யோனா | -யோனா4:9 |
| 5. அறிந்திருக்கிறார் | -நாகூ.1:7 | 10. சீமோன் பேதுருவை | -லூக்.22:32 |

# புதிய பிறப்பு பற்றி நாம் ஏன் பிரசங்கிக்கிறோம்

## WHY WE PREACH THE NEW BIRTH

*J.C.Choate*



புதிய பிறப்பு என்றால் என்ன? இது ஒரு நல்ல கேள்வி உண்மையான விஷயமாக இந்த கேள்வி பலமுறைகள் கேட்கப்பட்டு பல் வேறுபட்ட பதில்கள் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிகமானோர் இது என்ன என்பதை அறியத் தவறினவர்களாகவே இருக்கின்றனர்.

நம்முடைய பிரிவினை சபை நண்பர்கள் ஒரு தனிமனிதன் கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறபோது ஒரு அற்புதமான மாற்றம் அந்த மனிதனின் வாழ்வில் ஏற்படுகிறதே புதிய பிறப்பு என விளக்கமளிக்கின்றனர். ஆனால் இதைக்காட்டிலும் மேலான ஒன்று நிச்சயமாகவே நடைபெறுகிறது.

யோவான் 3-ஆம் அதிகாரத்திற்குத் திரும்புகையில் கிறிஸ்து இந்த புதிய பிறப்பைக் குறித்து பேசுகிறதை அல்லது ஒருவன் கண்டிப்பாக மறுபடியும் பிறக்கவேண்டும் என்பதைக் கேள்விப்படுகிறோம். கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பும் உடன்படிக்கை கொடுக்கப்படுவதற்கு முன்பும் இந்தக்காரியம் போதிக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள் கிறிஸ்துவின் உடன்படிக்கை, அல்லது கிறிஸ்தவம் நடைமுறைக்கு வந்திருந்த போது எது அவசியமாயிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இது போதிக்கப்பட்டது. இது இராஜ்யத்தின் வருகைக்கு முன் அல்லது சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னே போதிக்கப்பட்டது. ஆனால் கர்த்தர் இராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டதும் ஒருவன் அதற்குள் சேர்த்துக்கொள்ளப்படும்படிக்கு அவன் மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியம் என்று கூறினார்.

ஆனால் நாம் இந்த புதிய பிறப்பினைக் குறித்து இப்போது வாசிப்போம். வேதவாக்கியம், "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்ற பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து ரபி நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் அதற்கு

நிக்கொதேமு ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது அதன் சத்தத்தைக் கேட்கிறாய் ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும். இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்; நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை; பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே. பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனே யல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவருமில்லை (யோவா. 3:1-13).

முன்னதாக குறிப்பிட்டவற்றிலிருந்து, தயவு செய்து இதன் அமைப்பைக் கவனியுங்கள். நிக்கொதேமு என்னும் பேருள்ள ஒரு மனிதன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்தான். அவன் பரிசேயனாகவும் யூதருக்குள்ளே அதிகாரியாகவுமிருந்தபடியினால். இவன் தன்னுடைய சந்திப்பு ரகசியமாகயிருக்க வேண்டுமென அவன் அந்த நேரத்தில் வந்திருப்பான் என சிலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். பரிசேயர்கள் யூதமத பிரிவைச் சேர்ந்தவர்களாகயிருந்தனர். அவர்கள் உயிர்த்தெழுதலும். தேவதூதர்களும் உண்டென நம்பினார்கள். யூதர்களுடைய அதிகாரியாக இருப்பதென்பது அவன் ஒரு மூப்பனாகவும் மதிப்பிற்குரிய ஒரு பதவியை உடையவனாகவும் இருந்திருக்கின்றான் என்று அர்த்தமாகிறது. எப்படியாகிலும் இயேசுவினிடத்தில் வருகையில் அவன் அவரிடத்தில் விசுவாசமுள்ளவனாக இருந்தவன் எனக் குறிப்பிடுகிறான். அத்தோடுகூட அவன் இயேசுவினிடத்தில் ரபீ அல்லது போதகர் என்றும் மேலும் இயேசு அற்புதங்களைச் செய்ய வல்லமையுடைய வராயிருக்கிறபடியினால், இது அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது எனவும் குறிப்பிடுகிறான். அதற்கு இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக்காண, அவன் மறுபடியும் பிறப்பது அவசியமா யிருக்கிறது என்ற திட்டத்தினை அங்கு குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்து என்ன

சொல்லிக்கொண்டிருந்தாரென நிக்கொதேமு அறியாதபடியினால் இது அவனை குழப்பமடையச் செய்தது பின்பு அவன் ஒருவன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்பதை அறிய விரும்பினான். அவன் தொடர்ந்து அந்த மனிதன் தன் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அவன் அவ்வாறு பிறக்கமுடியாது. இயேசுவும் இவ்விதமான அர்த்தத்தில் போதிக்கவும் இல்லை. கிறிஸ்து ஒரு ஆவிக்குரிய பிறப்பினைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார் ஆனால் நிக்கொதேமு ஒரே பிறப்பினைப் பற்றி அறிந்திருந்தபடியினால் அவன் சரீரப்பிரகாரமான பிறப்பினைக் குறித்து நினைத்துக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சியாக, இயேசு திரும்பவும் புதிய பிறப்பினைக் குறித்து பெரிய விளக்கத்துடன் தெளிவுப்படுத்தினார். ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டியது அவசியமாயிருக்கிறதென்றும் இதைத்தவிர அதில் பிரவேசிப்பதற்கு வேறொரு வழியே கிடையாது என்றும் இன்னும் பல வார்த்தைகளின் மூலம் அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் இந்த வார்த்தைகளை நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆராய்ந்து பார்ப்போமாக. முதலாவது, அவர் ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று சொன்னதை கவனியுங்கள். பிறக்க வேண்டுமென்பது வரக்கூடிய ஒன்று. ஒரு பிறப்பு என்பது புதியவாழ்வை குறிப்பாகத் தெரிவிக்கிறது. ஆனால் தண்ணீரைப் பற்றிய காரியமென்ன? இயேசு நிக்கொதேமுவுக்கு இரண்டாம் முறையாக, ஒருவன் தன்தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து மறுபடியும் பிறப்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது என விளக்கினபடியினால் சரீரப்பிரகாரமான பிறப்பிற்கு தண்ணீர் ஒன்றும் செய்கிறதில்லை. நாம் இந்த "தண்ணீரை குறித்து நினைக்கையில் இன்னொரு விதியையும் நம்முடைய நினைவில் கொள்ள வேண்டும் அதாவது மற்ற எல்லா இடங்களிலும் இது எங்கு பயன்படுத்தப்படுகிறது. இது ஆவிக்குரிய தண்ணீரென்றால் அது யோசனை செய்ய வேண்டிய ஒன்று. இது ஜீவத்தண்ணீராகச் சொல்லப்பட்டுள்ளது. அல்லது இது வெளிப்படையான தண்ணீரில்லை என்பதை குறிக்கும் ஒன்றாகும். இன்னொரு வகையில் பல வசனங்களில் தண்ணீர் என்ற வார்த்தை காணப்படுகிற இடத்தில் இது வெளிப்படையான அல்லது உண்மையான தண்ணீர் என குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது பயன்படுத்தப்படும் வழி என்ன? தண்ணீர் என்ற வார்த்தை மட்டும் குறிப்பிடப்படுகையில் நாம் அவர் உண்மையான ஜலத்தைப் பற்றி பேசினார் என்ற முடிவுக்கு வரவேண்டும். இப்போது அடுத்த கேள்விக்குச் செல்வோம். தண்ணீரோடு சம்பந்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட வேதவாக்கியத்தில் நாம் என்ன செய்ய கட்டளையிடப்பட்டுள்ளதாக வாசிக்கிறோம். நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை நன்கு அறிந்தவர்களாக இருப்பீர்களென்றால் நீங்கள் அங்கே ஒரே

ஒரு கட்டளை அல்லது செயல், அதாவது தண்ணீரோடு சம்பந்தமுள்ளதும் அது ஞானஸ்நானமே என்பதையும் அறிந்துகொள்வீர்கள் அப்போஸ்தலர் 8:26-39-ல் எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதன் கிறிஸ்துவைப்பற்றி போதிக்கப்பட்டவனாகி அதன்பின் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவனாக இருந்தான் என நாம் வாசிக்கிறோம். இத்தோடுகூட ஒருவன் தண்ணீர் முழுக்கினால் கண்டிப்பாகப் பிறக்க வேண்டுமென கிறிஸ்து சொன்னார். ஒருவன் தண்ணீர் முழுக்கினால் எவ்வாறு பிறக்கமுடியும்? நல்லது இங்கே ஞானஸ்நானத்திற்கு தண்ணீர் குறிப்பிடப்பட்டிருக்குமானால் தண்ணீரில் ஞானஸ்நானம் என்பது ஒரு அடக்கம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோ 2:12), மேலும் தண்ணீரில் அடக்கம் என்றால் பிறகு ஒருவன் அந்த தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது வெளித்தோன்றுதல் அல்லது ஒரு பிறப்பின் அனுபவம் என்று அர்த்தமாகிறது. மேலும் அப்போஸ்தலர் பவுல் ஞானஸ்நானத்தில் என்ன நடக்கிறது என இங்கே விளக்குகிறார். (ரோம. 6:3,4).

ஜலத்தினால் பிறந்திருத்தல் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுத்தலைப் பற்றி தொடர்ந்து நாம் சிந்திக்கையில், ஒருவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் அவன் வெளித்தோன்றியிருக்கிறான் அல்லது ஒரு வாழ்வை பெற்றிருக்கிறான் என நாம் நினைவுபடுத்தப்பட்டிருக்கிறோம். மீண்டும் அப். பவுல் ரோமர் 6:3-லும் கலா. 3:26,27-லும் ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. மேலும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவர்கள் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறார்கள் என்று நமக்குச் சொல்லுகிறபடியினால் இது தண்ணீரோடு இணைக்கப்பட்டுள்ளது. பவுல், "இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17) என்றான். கிறிஸ்தவர்களிடம் பேதுரு சொன்னபோது, "நீங்கள் வளரும்படி புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேது 2:3) என்றான்.

இரண்டாவதாக கிறிஸ்துவானவர்; ஒருவன் ஆவியினால் பிறந்திருக்க வேண்டும் என்று சொன்னார். இங்கே அந்த ஆவியானவர் யார்? பவுல் எபேசியர் 4:4 ல் ஒரே ஆவியும் உண்டு என்றான் மேலும் அந்த ஆவி எப்படியிருக்கும்? அவர் நிச்சயமாகவே பரிசுத்த ஆவியானவர் அல்லது பரிசுத்த ஆவி (யோவா 14:26; அப் 1:8; அப் 2:38; 1தெச.4:8) ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வேலை என்னவாயிருந்தது? ஒரு காரணம் அவர் அப்போஸ்தலர்களை வழிநடத்தினார். மேலும மற்றவர்கள் கர்த்தருடைய வார்த்தையை எழுதும்படி செய்தார். அதற்கு முன்பாக அவர் தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு முற்காலத்து பரிசுத்தமனுஷர்களை வழிநடத்தினார். (2பேது 1:21) வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று பவுல் எழுதினான் (2தீமோ. 3:16,17) ஆனால் அந்த ஆவியின் வார்த்தையில் அல்லது கர்த்தருடைய வார்த்தையில்

என்ன வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சத்தியம் (யோவா 17:17), கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோமர் 1:16), அல்லது ஒருவன் இரட்டசிக்கப்பட என்ன செய்யவேண்டும் (அப். 2:37,38). ஒருவன் ஆவியானவரின் வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படியமாட்டானா? பேதுரு தன்னுடைய நாட்களிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, "...நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள். அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே. மாமிசமெல்லாம் புல்லைப்போலவும் மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்து அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே (1 பேது 1:22 - 25). ஒருவன் ஆவியினால் பிறக்க வேண்டும் என்று கிறிஸ்து யோவான் 3:5ல் சொன்னதை கவனியுங்கள் ஆனால் 1 பேதுரு 1:23ல் தேவனுடைய வார்த்தையினால் ஜெநிபிக்கப்பட்டீர்கள் என தேவஆவியினால் ஏவப்பட்ட மனிதன் கூறினான். ஆனால் யார் அந்த வார்த்தையைக் கொடுத்தது? ஆவியானவர். ஆனபடியினால் ஆவியினால் பிறப்பதும் தேவனுடைய வார்த்தையினால் பிறப்பதும் ஒன்றே. ஆனால் விசுவாசம் எப்படிவருகிறது? தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது. (ரோம. 10:17). பின்பு ஒருவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தால் அவன் அதற்குக் கீழ்ப்படிவான், அவன் அதற்குக் கீழ்ப்படிந்தால் அவன் ஞானஸ்நானம் பெறுவான் அல்லது தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு இவ்விதமாக அவன் இரட்சிக்கப்படுவான் (கொலோ 2:12; மாற். 16:16) அதுவே பேதுரு 1பேது 1:23ல் கூறியவை; அதாவது நாம் பரிசுத்த ஆவியினால் சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதன்மூலம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் அல்லது பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையின் மூலம் ஒருவனை வழிநடத்துவது என்பதாகும்.

ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்பது ஒருவன் தேவனுடைய வார்த்தையின் போதனைக்குக் கீழ்படிந்து கிறிஸ்துவில் விசுவாசம்வைத்து, தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு. தன்பாவங்கள் மன்னிக்கப்படும்பொருட்டு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, அதன்பின் கர்த்தர் அந்த மனிதனை இரட்சித்து தம்முடைய ராஜ்யம் அல்லது சபையில் சேர்க்கிறார். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தை வாசியுங்கள் உண்மையாகவே அன்று எருசலேமிலிருந்த ஜனங்கள் என்ன செய்தார்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள் இவ்வளவு நேரமாக பயன்படுத்தப்பட்ட சிறிதும் தவறில்லாத அந்த வார்த்தைகளைத் தவிர மறுபடியும்

பிறப்பதைக் குறித்துச் சொல்ல வேறொன்றும் கிடையாது. ஆனால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தபோது அது அவனை தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கப்பண்ணுகிறது என்று கிறிஸ்து சொன்னதினால் அவர்கள் மறுபடியும் பிறந்திருக்கிறார்கள் எனவும் மேலும் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் காண்கின்ற ஜனங்கள் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை கேள்விப்பட்டு அதை விசுவாசித்து தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது கர்த்தர் அவர்களை இரட்சித்து சபையிலே சேர்த்துக்கொண்டார் என நாம் அறிகிறோம். ஆனால் ராஜ்யம் மற்றும் சபையைக் குறித்த காரியம் என்ன? அவைகள் வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லையா? இல்லை, தேவவாக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள படியால் ஒரே ஸ்தாபனம் அல்லது அமைப்பாக ராஜ்யம் மற்றும் சபை அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறபடியினால் பல்வேறுபட்ட ஸ்தாபனங்களாக இல்லை. கொலோசெயார்1:14ல் உதாரணமாக கொலோசெய சபைக்கு பவுல் எழுதுகின்றான் இன்னும் அவன், "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். (குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:13,14) என்கிறான். அப்போஸ்தலர் 2-ல் ஜனங்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது அவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்களெனவும் ஆனால் அப்போஸ்தலர் 8-ல் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை சமாரியர்கள் விசுவாசித்தபோது புருஷர்களும் ஸ்திரீகளும் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள் என அவ்வசனம் கூறுகிறது. (அப் 8:12) அப்.2-ல் குறிப்பிடப்பட்ட ஜனங்கள் சபை அங்கத்தினர்களாகவும் சமாரியர்கள் ராஜ்யத்தின் அங்கத்தினர்களாகவும் மாறி இவ்விதமாக இரு வேறுபட்ட அமைப்புகளாக இருந்தது என்று அர்த்தமாகிறதா? இல்லை. அவைகள் இரண்டும் ஒரே அமைப்பாகவும் ஸ்தாபனமாகவும் இருக்கிறது.

ஆனபடியினால் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்திருக்கிறபோது அவன் கர்த்தருடைய வார்த்தையை கேள்விப்படுகிறான் அவன் அதை விசுவாசிக்கிறான். தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புகிறான். கிறிஸ்துவில் கொண்டுள்ள தன்னுடைய நம்பிக்கையை, இவ்வாறாக அவன் இரட்சிக்கப்பட்டு அதன்பின் கர்த்தர் அவனை தம்முடைய சபையில் சேர்க்கிறார், அதாவது அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறான். கர்த்தருடைய குடும்ப அங்கத்தினனாக, ஒரு புதிய சிருஷ்டியாக, ஒரு புதிய கிறிஸ்தவனாக, அவன் வளர்ந்து, பெருகி, விசுவாசத்தில் பலங்கொண்டு ஒரு முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனாக இருப்பான். நாம் கர்த்தரை பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், நித்தியஜீவனைக்குறித்த நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால், இதை நாம்

செய்யவேண்டும். இதை நாம் ஒவ்வொருவருக்கும், மேலும் உலக முழுவதுக்கும் பிரசங்கிக்க வேண்டும்.

நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால், இதைச்செய்யும்வரை, நீங்கள் இழந்தவராகவும் இன்னும் இழந்து போகிறவர்களாகவும் இருப்பீர்கள். இவ்வுலகத்திலும், வரப்போகிற உலகத்திலும் நீங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு மறுபடியும் பிறப்பதற்கு வேறு வழியே இல்லை. நீங்கள் இந்த காரியங்களை அறிந்து கொள்ளும் வரைக்கும் மேலும் நீங்கள் அவர் கற்பித்திருக்கிறபடி செய்யும்வரைக்கும் தொடர்ந்து கற்றுக்கொள்ளவேண்டுமென நாங்கள் ஜெபிக்கிறோம்.

## நடப்புச் செய்திகள்

1. குஜராத் மாநிலம் சூரத் மாவட்டத்தில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
2. பி.டி.ரகம் எனும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.
3. அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் ஒரு மாவட்டத்துக்கு அந்நாட்டு அரசு மகாத்மா காந்தி பெயரை வைத்துள்ளது.
4. எலக்ட்ரானிக் சாதனங்களின் விலையை 5 சதவீதம் வரை உயர்த்த எல்.ஜி, கோத்ரேஜ், வீடியோகான், மற்றும் வேர்ல்பூல் ஆகிய முன்னணி நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.
5. இந்தியாவின் நம்பர் 1 டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமலின் விளையாட்டு விவரம் குறித்த புதிய இணையதளம் வெளியானது.

The World Evangelism
கொடைக்கானலில் நடத்தும் Retreat -ல் கலந்து கொள்ள விருப்பமானால், இன்றே உங்களுடைய பெயரை கீழ்க்காணும் முகவரியில் ரூ.100/- அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள். தேதி பின்பு அறிவிக்கப்படும்.

**THE WORD OF CHRIST**
**P.O.BOX 5,**
**Batlagundu 624 204,**
**S.INDIA**

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவில் பாபா அணு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
   அ) கொல்கத்தா ஆ) டெல்லி இ) மும்பை
2. ரிக்டர் அளவுகோல் எதை கணக்கிட பயன்படுகிறது?
   அ) காற்றின் அழுத்தம் ஆ) நிலநடுக்கத்தின் அதிர்வுஅளவு இ) காற்றின் அழுத்தம்
3. எந்த பருவத்தில் வாயு மண்டலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும்?
   அ) பருவக்காற்றுக்காலம் ஆ) இலையுதிர்காலம் இ) மழைக்காலம்
4. இந்தியாவில் உடன் கட்டை ஏறும் பழக்கத்தை தடுக்க சட்டம்கொண்டு வந்தவர் யார்?
   அ) வில்லியம்பெண்டிங்பிரபு ஆ) சர்சன்பிரபு
   இ) இர்வின்பிரபு
5. ஆகாயவிமானம் மற்றும் எந்திரப்படகுகளின் வேகத்தை கண்டுபிடிக்க உபயோகிக்கப்படும் கருவிஎது?
   அ) ஸ்பீடோமீட்டர் ஆ) ஓடோ மீட்டர்
   இ) டாக்கோமீட்டர்

விடைகள்:
1. மும்பை
2. நிலநடுக்கத்தின் அதிர்வு அளவு
3. மழைக்காலம்
4. வில்லியம்பெண்டிங்பிரபு
5. டாக்கோமீட்டர்

# நித்திய பலியான இயேசு கிறிஸ்து
## Jesus Christ, Eternal Sacrifice

*Betty Burton Choate*



### நம்முடைய மறுமொழி

தேவவாக்கியங்களில் மிகச்சரியான முழுமையான வாசிப்பில் நாம் தொடர்ச்சியான ஆயத்தத்தையும், ஒன்றின்மேல் ஒன்றாக கட்டப்பட்டுள்ளதையும் இறுதியாக மனிதன் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கு திறந்த வழி கொடுக்கப்பட்டிருக்கிறதையும் காணலாம். பாவத்திற்கான சரீரப்பிரகாரமான தண்டனைக் குரியவை இயேசுவின் மரணத்தில் கிரயமாக்கப்பட்டது. மனிதவர்க்கத்தோடு அவர் கட்டப்பட்டு, தேவனுடைய புத்திர உறவினால் தேவனோடு நம்முடைய புத்திர உறவிற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டதின் மூலம் ஆவிக்குரிய ஒப்புக்கொடுத்தல் உருவாக்கப்பட்டது.

இவையெல்லாம் நமக்கு முன் திட்டமிடப்பட்டு, நம்முடைய ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்ய போதுமானதாயிருக்கிறது. ஆனால் மற்றபடி மன்னிப்பின் போர்வை ஒவ்வொரு மனிதனையும் மூடிக்கொள்கிறதில்லை. நாம் எவ்வாறு இதை நமக்கென்று சொந்தமாக்கிக் கொள்கிறோம்? **நாம் எவ்வாறு தனிப்பட்ட முறையில் தேவனுக்கு மறுமொழி கொடுக்கிறோம்?** (யோவா 6:45).

"பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்" என்கிறது. உலக ஜனத்தொகையின் மத்தியில் எல்லாரும் பிதாவின் செய்தியிலிருந்து உண்மையாக கற்றுக்கொள்கிறதில்லை. 2 தெசலோனிக்கேயர் 2:14. " எங்கள் சுவிசேஷத்தினாலே அவர் உங்களை அழைத்தார்" என போதிக்கிறது.

எனவே பிதாவின் செய்திச் சுவிசேஷம் நம்முடைய இருதயங்களுக்கு அழைப்புவிடுகிறது. சுவிசேஷம் என்றால் என்ன? இது கொரிந்தியர் 15:3,4ல் இவ்வாறாக விளக்கப்பட்டுள்ளது.

"கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து"

### ஒப்புக்கொடுத்தல் - The Commitment

சில ஜனங்கள் செய்தியைக் கேட்டு அதை மறுதலிக்கின்றனர். மற்றவர்கள் கேட்டு இதன் அழைப்பு தங்களுடைய இருதயங்களை உடைக்கிறது என அவர்களுடைய மறுமொழி பிதாவினிடத்தில் ஒரு உணர்ச்சியுள்ள அன்பு

மழையாக தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் விருப்பத்தில் உடன்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களில் ஒரு திருப்புமுனை வந்தடைந்தது என்பதை அறிந்து கொள்கின்றனர்.

பரிதாபப்படத்தக்க வகையில் பலர் தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் ஆவிக்கேற்றபடி பிறந்திருக்கிறார்கள் என்றும் தேவன் மேலுள்ள தங்களுடைய புதிய அன்பு சாட்சிபகருகிறபடியினால் அவர்களுடைய இருதயம் மாற்றப்பட்டு அவர்கள் சந்தோஷமும் அடைகின்றனர் என்று தவறாக நம்புகின்றனர்.

சந்தேகமே இல்லை, திருப்புமுனை, ஒப்புக்கொடுத்தலின் நொடிப்பொழுது போன்றவை இரட்சிப்பினுடைய ஒழுங்குமுறையின் ஒரு கடினமான பகுதியாயிருக்கிறது. நம்முடைய வேதவாக்கிய ஆராய்ச்சியில் எப்போது இதற்கு இணையான ஒரு சம்பவத்தை நாம் காண்கிறோம்? இயேசு மனிதனுக்காக முழுமையான ஒப்புக்கொடுத்தலின் விளிம்பை அடையும்போது கெத்சமனே தோட்டத்தில் இது காணப்படவில்லை அவர் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க போராடினபோதும் கூட செய்யப்பட்டுள்ள பாவத்திற்காக திகில் அடைந்ததாக பொருள்பட்டது.

உண்மையாக அவர் அந்த திட்டத்தினை சந்திக்க வேண்டியவராயிருந்தார் மேலும் நம்மைத் தெரிந்துகொண்டாலும் நிராகரித்தாலும் உண்மையாகவே அவர் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டியவராயிருந்தார் நாம் ஒவ்வொருவரும் அந்தத் திட்டத்தினை சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் கண்டிப்பாக தேவனை நம்முடைய பிதாவாக தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது அவரை புறக்கணிக்க வேண்டும். நாம் கண்டிப்பாக நம்முடைய மாம்ச சித்தங்களை அவருக்குக் கீழாகக் கொண்டு வரவேண்டும், கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து கொள்வதைத் தெரிந்துகொண்டது போல, நாம் அந்தப் பாவத்திற்கு இனி ஒருபோதும் ஊழியஞ்செய்யக்கூடாது என்ற விருப்பத்தோடு அவைகளை நம்மிடமிருந்து எடுத்துப்போடும்படி அவருக்கு அனுமதி அளிப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், கிறிஸ்து தோட்டத்தில் மனப்பூர்வமான ஒப்புக்கொடுத்தலோடு முடித்திருந்தார் என நினைக்கலாம். அந்த நேரத்திற்குத் திரும்புகையில்: அவருடைய போராட்டம் நிறைவடைந்தது; அவர் தமக்குள்ளாக சமாதானத்தோடிருந்தார். இன்று தேவனுடைய மன்னிக்கப்பட்ட குழந்தையாக இருக்கும் விருப்பத்தோடு, அன்பினால் அவைகள் அவரிடமாகத் திரும்பும்போது இது பல இருதயங்களை விவரிக்கின்றதில்லையா? அவர் அதை நிறுத்தியிருப்பாரால், அங்கே **சிலுவை** இருந்திருக்காது, **இரத்தஞ்சிந்துதல்** இருந்திருக்காது, **பாவத்திற்கான கிரயம் செலுத்தப்பட்டிருக்காது, தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படிக்கு நமக்காக ஒரு வழி உருவாக்கப்பட்டிருக்காது.**

இதே முறையில், தங்களுடைய தனிப்பட்ட சுய ஒப்புக்கொடுத்தல் நிலையில் தடைசெய்கிறவர்கள் பாவத்திற்கு மரிக்கின்ற ஒழுங்கு முறையிலும்

கிறிஸ்துவோடு மரிப்பதிலும் அவரோடுகூட உயிர்த்தெழுதலிலும் பங்கடையவே முடியாது.

தேவனால் மன்னிக்கப்பட்ட ஒருவன் என்பதன் அர்த்தம் பாவிக்குள் மனம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவன் அதிகம் கிரியை செய்யவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறாரா?

## கிறிஸ்துவோடு மரித்தல் - Dying with Christ

நமக்காக மரித்த அவருடைய மரணத்தில் நாம் எவ்வாறு கிறிஸ்துவை மிக ஆர்வத்துடன் பின்பற்றுகிறோம்? ரோமர்6:17,18 இவ்வினாவிற்கு

"முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்" என்று நமக்குச் சொல்லுகிறது.

**இவ்வாறாக, மரணம், அடக்கம் மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகிய தேவனுடைய செய்தியை நாம் கேள்விப்படுகிறோம்.**

நாம் இதன் அர்த்தத்தைக் கற்று அறிந்திருக்கிற வண்ணமாக அவருடைய அன்பின் வல்லமையானது பாவத்தை விட்டு திரும்புபடிக்கு நம்மை அழைத்துக் கொண்டு வருகிறதாகவும் அவருக்கு நம்முடைய ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்கும்படிக்கு நம்முடைய இருதயங்களை அழைக்கிறது. **பிறகு அந்த கோட்பாட்டின் அமைப்பிற்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிறோம்.** சுவிசேஷம் - மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் - என்பவை எந்த அமைப்பை நம்முடைய சொந்த வாழ்வில் ஏற்படுத்துகிறது? ரோமர்6:3-11.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப்பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" என்று விடையளிக்கிறது.

எனவே, கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் நம்முடைய தனிப்பட்ட சொந்த ஆத்துமாக்களுக்கு புத்திர உறவை ஏற்படுத்தி உரிமைபாராட்ட விரும்புவோமானால், நாம் கண்டிப்பாக அவருடைய மரணத்தின் மாதிரியின்படி பாவத்திற்கு **செத்து,** ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு அதன்பின் **உயிர்த்தெழுந்து** அல்லது தேவனுடைய குடும்பத்தில் ஒரு புதிய மனுஷனாக ஒரு புதிய ஜீவியத்தை நடத்தும்படிக்கு ஞானஸ்நானத்திலிருந்து எழுப்பப்பட வேண்டும். **இந்த மரணம் மற்றும் புதிய பிறப்பு இல்லாமல் புதிய வாழ்வு இருக்க முடியாதென** நாம், தனிப்பட்டவிதத்தில் தேவனுக்கு முன்பாக அறிந்து கொள்வது இவற்றின் அதிமுக்கியமானதாகும்.

## "புதிய மனிதனின்" பிறப்பு - The Birth Of the "New Man"

இந்த ஒழுங்கு முறையில் என்ன நடைபெற்றுள்ளது? பழைய மனிதனின் மரணத்தில், ஒரு புதிய பிறப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. இயேசு போதித்தபடி "..... ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் (மறுபடியும்) பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்...." (யோவான்3:3-5).

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17).


ஒரு வழி

'ஒருவழி' வேதபாடம்

**The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய்15-ஐ அனுப்பி,

ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்

வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**

**Post Box 5, Batlagundu-624 202 S.INDIA**



★ இம்மாதம் கிடைத்த **Electronic Franking Machine** கிடைத்தமைக்காக...

★ சகோ.ஜான் எஸ்.நாதன் அவர்களுடைய சுகத்திற்காக...

★ சகோ.ஹீராலால் அவர்களுடைய சுகத்திற்காக...

ஜெபியுங்கள்





★ சகோ.பி.ஆர்.சாமி அவர்கள் புதிதாக வெளியிட்டுள்ள "சத்திய வழி" பாடல்புத்தகத்திற்காக நன்றி சொல்லி...

# பிரிவினைகூட்டத்தார்

-K.Ramraj

ஆதியிலே வானமும் பூமியும் உண்டாக்கப்படுவதற்கு முன்பே தேவகுடும்பத்தில் மூவர் இருந்ததாக வேதம் நமக்கு போதிக்கிறது ஆதி.1:1,2; யோவா.1:1-3. சிருஷ்டிப்பின் நாட்களில் மனிதனை உண்டாக்குகிறதைக் குறித்து நாம் படிக்கிற வசனத்தில் **நமது** சாயலாகவும், **நமது** ரூபத்தின்படியேயும் உண்டாக்குவோமாக என்கிற வார்த்தைகள் பன்மையில் சொல்லப்பட்டிருப்பதால் அங்கே ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருப்பது தெரிகிறது ஆதி.1:26.

நோவா காலத்து ஜலப்பிரளயத்திற்கு பின்பு ஜனங்கள் சிநேயர் தேசத்தில் குடியிருந்தபோது தங்களின் பெருமையை நினைக்கும்படியாக வானளாவிய கோபுரத்தை கட்ட முயற்சித்தபோது **நாம்** இறங்கிப்போய்... அவர்கள் பாஷைகளை தாறுமாறாக்குவோம் என்கிற வார்த்தையில் பன்மையில் சொல்லப்பட்டிருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருப்பதை அறிகிறோம் ஆதி.11:7. அவர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவரே.இப்படி ஆதிமுதலாக ஒன்றாக இருக்கிற பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்கிற தேவகுடும்பத்தில் ஒருவரை பிரித்து பிதா ஒருவர் போதும் அவர்தான் நம்மை உண்டாக்கினவர் குமாரனோ, பரிசுத்த ஆவியோ நமக்கு தேவையில்லை என்று சொல்லுகிறவர்கள், போதிக்கிறவர்கள் பிரிவினைக்கூட்டத்தார்கள் என அறிகிறோம்.

## குமாரன்

நாம் யோவா.1:1-3 வசனங்களைப் படிக்கையில் சிருஷ்டிப்பின்போது வார்த்தை இருந்தது என்றும் யோவா.1:14-ல் அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளாக வாசம் பண்ணினார் என்றும் படிக்கிறோம். ஆகவே இயேசுகிறிஸ்து ஆதியிலே தேவனுடைய வார்த்தையாக இருந்தார் என்பது நமக்குத்தெரிகிறது. மத்.3:16, மாற்.1:10,11,: லூக்.3:21,22 ஆகிய வசனங்களில் இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று கரையேறினபோது பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல இறங்குகிறதையும் பிதாவாகிய தேவன், இவர் என்னுடைய நேசகுமாரன் என்று சாட்சியிடுகிறதையும் பார்க்கிறோம்.

பிதாவைக் குறித்து இயேசுகிறிஸ்து பேசும்போது நான் சுய மகிமையைத் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதைத் தேடுகிறேன் என்கிறார் யோவா.5:30.நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல் பிதா எனக்கு போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்கிறார் யோவா.8:2. நியாயத்தீர்ப்பைக் குறித்து போதிக்கையில் நான் தனித்திருக்கவில்லை நானும் என்னை அனுப்பின பிதாவும் இருக்கிறோம் என்கிறார் யோவா.10:30. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இயேசுகிறிஸ்து பேசுகிறார். பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வருகிறவருமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார் யோவா.15:26. சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார் என்கிறார் யோவா.16:13. இப்படி இயேசுகிறிஸ்துவும், தன்னை அனுப்பின பிதாவும் நானும்

ஒன்றாயிருக்கிறோம் என்றும் வரப்போகிற பரிசுத்த ஆவியானவர் நம்மை சத்தியத்தில் வழிநடத்துவார் என்றும் போதிக்கிறார். இப்படியிருக்க, இல்லை எனக்கு இயேசுகிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் மட்டுமேபோதும் என்று சொல்லுகிறவர்கள் போதிக்கிறவர்கள் பிரிவினைக்கூட்டத்தார்கள் என அறிகிறோம்.

**பரிசுத்த ஆவியானவர்**

பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் வந்திறங்கினார் அப்.2:1-4. பரிசுத்த ஆவியானவரால் தேவனுடைய மகத்துவங்களைப் பேசினார்கள் அப்.2:11. பேசுகிறவர் நீங்களல்ல உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர் என்று மத்.10:20-ல் சொன்ன வார்த்தையின்படியே பரிசுத்த ஆவியானவர் வந்து தீர்க்கதரிசன வசனங்களை மேற்கோள் காட்டி பிதாவைக்குறித்தும், குமாரனைக் குறித்தும் சாட்சியிடுகிறார் அப்.2:16-35.

பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக்குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார் யோவா.16:7-11. இப்படி பிதாவோடும், குமாரனோடும் பரிசுத்த ஆவியானவர் இணைந்து பேசப்படுகிறபோது பரிசுத்த ஆவியானவர் மட்டும் போதும் பிதாவும் குமாரனும் அவசியமில்லை என்றும் அல்லது பிதாவும் குமாரனும் போதும் பரிசுத்த ஆவியானவர் அவசியமில்லை என்றும் சொல்லுகிறவர்கள், போதிக்கிறவர்கள் பிரிவினைக் கூட்டத்தார்கள்.

**பிதா குமாரன் பரிசுத்தஆவி**

இந்த மூவரையும் குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் நமக்குச் சொல்வது, இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர், ஜலத்தினாலே மாத்திரமல்ல ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியம் ஆகையால் ஆவியானவரே சாட்சி கொடுக்கிறார்.

பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை பரிசுத்தஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். பூலோகத்தில் சாட்சியிடுகிறவைகள் மூவவை ஆவி ஜலம் இரத்தம் என்பவைகளே. இம் மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது 1யோவா.5:6-8. அன்பான சகோதரனே, சகோதரியே பெற்றோரே பூமியிலே ஆவி, ஜலம், இரத்தம் இதில் எந்த ஒன்று இல்லை என்றாலும் சரீரம் ஜீவனோடு இருக்க முடியாதே! அதைப்போல தேவகுடும்பத்தில் உள்ள பிதா, குமாரன், பரிசுத்தஆவி இம்மூவரும் வல்லமை பெற்றவர்களாய் இருக்கிறார்கள் என்பதை உணருங்கள். இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் ஜெபிக்கும்போது, இவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிப்பதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன் என்று ஜெபிக்கிறார் யோவா.17:21. சுயமாய் பேசுகிறவன் தன் சுய மகிமையைத் தேடுகிறான் தன்னை அனுப்பினவரின் மகிமையை தேடுகிறவன் உண்மையுள்ளவனாயிருக்கிறான். அவனிடத்தில் அநீதியில்லை யோவா.7:18. பிரிவினை கூட்டத்தாரை அடையாளம் கண்டு அவர்களுடைய உபதேசத்தை விட்டு விலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

பகுதி-3 UNIT

# சிறுவர்களுக்காக...

## Especially For Kids



★ யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் ஞானமே நலம்: பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான் - பிரசங்கி 9:18

Wisdom is better than weapons of war: But one sinner destroys much good - Eclesiastes 9:18

★ பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம் - நீதிமொழிகள் 21:3

To do righteousness and justice is more acceptable to the Lord than sacrifice - Proverbs 21:3

★ இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள் - மத்தேயு 5:7

Blessed are the merciful, for they shall obtain mercy - Matthew 5:7

★ நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு - ரோமர் 12:21

Do not be overcome by evil, but overcome evil with good - Romans 12:21

★ போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் - 1 தீமோத்தேயு 6:6

Now godliness with contentment is great gain - 1Timothy 6:6

### கேள்வி - Question

1. தீமோத்தேயுவின் பாட்டி பெயர் என்ன? அ)சப்பிராள் ஆ)லோவிசாள் இ)தபீத்தாள்
What is the name of Timothy`s grandmother? ? A)Sapphira B)Lois C)Tabitha

2. யோனா மீன் வயிற்றில் எத்தனை நாள் இருந்தான்? அ)4ஆ)2 இ)3
How many days was Jhnah in the belly of the fish? A)4 B)2 C)3

3. சகேயு எந்த மரத்தில் ஏறினான்? அ)அத்தி மரம் ஆ)பனைமரம் இ)காட்டத்திமரம்
On which tree zacchaeus..climbed up? A)Fig treeB)Palm tree C)Sycamore tree

4. யோவான்ஸ்நானனுடைய தயார் பெயர் என்ன? அ)அன்னாள் ஆ)எலிசபெத் இ)மார்த்தாள்
What is the name of John the Baptist`s mother?
A)Hannah B)Elizabeth C)Martha


5. எந்த பட்டணத்தில் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது? அ)எபேசு ஆ)பிலிப்பு ஈ)அந்தியோகியா
In which city the disciples were called christians? A)Ephesus B)Philippi C)Antioch

### CHORUSES

என் உள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே
இயேசென்னை இரட்சித்தார்
நான் துதித்து பாடுவேன்
எவரும் அறியாரே
என் உள்ளம் பொங்குதே
என் உள்ளம் பொங்கி பொங்கி பொங்கி பொங்கி வழியுதே

It`s bubbling, It`s bubbling,
It`s bubbling, in my soul,
I am singing and praising
since Jesus made me whole
No folks can understand me
How can I keep it quiet.
It`s bubbling, bubbling, bubbling,
Bubbling, bubbling, day and night.

கடந்த மாதம் கலந்து கொண்டவர்கள்
1. T.Ilamathy
2. S.V.Jayakani



சிறுவர் பகுதி

# பேலியாளின் மக்கள்



***வேதவாசிப்பு: 1சாமு.2:12-17***

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலிஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர். அதைப்போல, ஆசாரியனாகிய ஏலியின்பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்ன தெரியுமா? எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா? உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக்கூடியவர்கள்கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து, ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:**


**"மாறுபாடுள்ள இருதய முடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்" (நீதி.11:20).**

# வேத அறிவுப் போட்டி எண்.114


போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. ஏசா வம்சத்தாரோ எதைப்போலிருப்பார்கள் ?
2. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், எனக்கு என்னவாயிருப்பீர்கள் என்று இயேசு சொன்னார் ?
3. நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் என்னசெய்யக்கடவது ?
4. யாரை யூப்பித்தர் என்றும் யாரை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள் ?
5. எவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான் ?
6. நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற எதுவே அப்படிச் செய்கிறது என்கிறார் பவுல் ?
7. நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கினேன் என்ற தீர்க்கதரிசி யார் ?
8. வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் யாருக்கு உண்டு ?
9. நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு, ஆட்டுமயிரை உடுப்பாக்கிக்கொள்ளுகிறீர்கள்; கொழுத்ததை அடிக்கிறீர்கள் ஆனால் எதை மேய்க்காமற்போகிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் ?
10. சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார் என்று பவுல் எந்த சபையாருக்கு எழுதுகிறார் ?



**Bro.P. BHOOPATHI,** Evangelist, Mobile: 94876 04827
Church of Christ, C/o T. Christy Kumar,
20/2, 4th cross, Kamarajapuram West street,
Karur - 639 002, **KARUR DISTRICT, S.INDIA**
Sunday Worship : 9.30 a.m.



Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Feb.2010



KODAIKANAL BIBLE STUDY

## உங்கள் வானொலியில்

இலங்கை ஆசிய சேவை
SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு சனிக்கிழமை மாலை
5.30 முதல் 5.45 மணி வரை
கேட்டு பயன் பெறுங்கள்

## உங்கள் தொலைக்காட்சியில்

**TAMILAN TV**
EVERY Monday 6.00 - 6.15 a.m
**IMAYAM TV**
EVERY Wednesday 6.30 - 6.45 a.m

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
**17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202, DINDIGUL DISTRICT, S.INDIA.**
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in
Website: www.thewordofchristindia.com

*Postal Address:*
**THE WORD OF CHRIST**
**POST BOX No. 5**
**BATLAGUNDU - 624202**
**S.INDIA**